*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*04 08 2025 MONDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *ஜார்கண்ட் முன்னாள் முதலமைச்சர் திரு. சிபு சோரன் உடல்நலக் குறைவால் இன்று காலமானார். அவரது மறைவுக்கு குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.*
- *பிலிப்பைன்ஸின் மதிப்புமிக்க நட்புறவு நாடாக இந்தியா திகழ்கிறது என்று அந்நாட்டு அதிபர் திரு. Ferdinand R Marcos Junior தெரிவித்துள்ளார்.*
- *அமெரிக்கா மற்றும் இந்தியா இடையேயான வர்த்தகம் தொடர்பாக, சமூகவலைதளங்களில் பரப்பப்படும் பொய்யான தகவல்களை நம்ப வேண்டாம் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.*
- *நாட்டின் மொத்த மின்சார வாகன உற்பத்தியில் 40 சதவீத பங்களிப்பை தமிழகம் வழங்கி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*
- *ஏமன் கடல்பகுதியில் படகு மூழ்கி ஏற்பட்ட விபத்தில் எத்தியோப்பியாவைச் சேர்ந்த 68 பேர் உயிரிழந்தனர்.*

*>>>>>><<<<<<*

*ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா நிறுவனரும், அம்மாநில முன்னாள் முதலமைச்சருமான திரு. சிபு சோரன் உடல்நலக் குறைவால் இன்று காலமானார். அவருக்கு வயது 81.*

*சிறுநீரக பாதிப்பு தொடர்பாக தில்லியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவர் இன்று உயிரிழந்தார்.*

*சிபு சோரன் மறைவுக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இரங்கல் தெரிவித்துள்ளார்.*

*அவரது மறைவு, சமூகநீதி பரப்பில் பெரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*ஜார்க்கண்ட் மாநில உருவாக்கம் மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக அவர் ஆற்றிய பங்களிப்பு என்றென்றும் நினைவுகூரப்படும் என்று தமது இரங்கல் செய்தியில் குடியரசுத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.*

சிபுசோரன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூகத்தின் ஏழை, ஒடுக்கப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அவர் தம் வாழ்வை அர்ப்பணித்தார் என்று தமது சமூகவலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஜார்க்கண்ட் மாநிலம் மற்றும் அங்குள்ள மக்களின் வளர்ச்சிக்காக சிபுசோரன் வாழ்நாள் முழுவதும் சேவையாற்றியதாக கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில். சமூகநீதிக்காக தம் வாழ்வை அர்ப்பணித்தவர் சிபுசோரன் என்று குறிப்பிட்டுள்ளார்.

சிபுசோரன் மறைவை அடுத்து, மூன்று நாள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று ஜார்க்கண்ட் மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

பிலிப்பைன்ஸின் மதிப்புமிக்க நட்புறவு நாடாக இந்தியா திகழ்கிறது என்று அந்நாட்டு அதிபர் திரு. Ferdinand R Marcos Junior தெரிவித்துள்ளார்.

ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியாவுக்கு வருகை தரும், அந்நாட்டு அதிபர் பிலிப்பைன்ஸிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக மதிப்பீடுகள். கடல்சார் ஒத்துழைப்பு, மண்டல அமைதி உள்ளிட்டவற்றில் பரஸ்பரம் இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக அதிபர் கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான நட்புறவு, நிலையான வளர்ச்சி மற்றும் பன்முகத்தன்மை கொண்டதாக விளங்குகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு, வர்த்தகம், சுகாதாரம், டிஜிட்டல் இணைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பரஸ்பரம் இருநாடுகளும் பலன் பெறும் வகையில் ஒருங்கிணைப்பை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக திரு. Ferdinand R Marcos Junior நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இன்று மாலை வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேசும் பிலிப்பைன்ஸ் அதிபர், பின்னர் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை சந்தித்து பேசவுள்ளார்.

>>>>>><<<<<<

ஜார்க்கண்ட் முன்னாள் முதலமைச்சர் சிபுசோரன் மறைவை அடுத்து, மாநிலங்களவை இன்று நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 11 மணிக்கு மக்களவை கூடியபோது, பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக விவாதிக்க வேண்டும் என்று கோரி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, மக்களவை பிற்பகல் இரண்டு மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

>>>>>><<<<<<

அமெரிக்கா மற்றும் இந்தியா இடையேயான வர்த்தகம் தொடர்பாக, சமூகவலைதளங்களில் பரப்பப்படும் பொய்யான தகவல்களை நம்ப வேண்டாம் என்று பத்திரிகை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்த அலுவலகத்தின் உண்மை சரிபார்க்கும் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்கள் மீதான வரி விதிப்பு தொடர்பாக, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் மற்றும் இந்திய வெளியுறவுத்துறை சில அறிக்கைகளை வெளியிட்டுள்ளதாக பொய்யான தகவல்கள் பரப்பப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற தகவல்களை பகிர்வதற்கு முன்னர், சமூகவலைதளப் பயனர்கள் அவற்றை சரிபார்க்க வேண்டும் என்று பத்திரிகை தகவல் அலுவலகம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டிற்கு உதவும் வகையில் இளையோர் தமது அறிவுத்திறனை செயல்படுத்த வேண்டும் என்று ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா கூறியுள்ளார்.

ஜம்மு பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர், சமூகத்தின் தேவைகளை புரிந்து கொண்டு, அதனை பூர்த்தி செய்யும் வகையில் செயலாற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

*பிரதமர் திரு. நரேந்திர மோடியின் கீழ், உலக அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இந்தியா பரிமளித்து வருவதாகவும், இந்தப் பயணத்தில் இளையோர் மிகப் பெரிய அளவில் பங்காற்ற வேண்டும் என்றும் திரு. மனோஜ் சின்ஹா கேட்டுக் கொண்டார்.*

*>>>>>><<<<<<*

*நாட்டின் மொத்த மின்சார வாகன உற்பத்தியில் 40 சதவீத பங்களிப்பை தமிழகம் வழங்கி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*

*தூத்துக்குடியில் அமைந்துள்ள தனியார் மின்சார வாகன தயாரிப்பு தொழிற்சாலையை இன்று அவர் திறந்து வைத்து, வாகன விற்பனையை தொடங்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த ஆலை மூலமாக தென்மாவட்டங்களைச் சேர்ந்த இளையோர் அதிக அளவில் வேலைவாய்ப்பு பெறுவார்கள் என்று திரு. மு.க.ஸ்டாலின் கூறினார்.*

*(சவுண்ட் பைட் – ஸ்டாலின் 40 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*பீஹார் மாநிலம் பாகல்புர் மாவட்டத்தில் நேற்றிரவு நேரிட்ட சாலை விபத்தில், 3 பேர் உயிரிழந்தனர், 2 பேர் காயமடைந்தனர்.*

*சுல்தான்கஞ்ச்-சில் உள்ள கங்கை ஆற்றிலிருந்து நீரை சேகரிப்பதற்காக சென்ற பக்தர்கள் வாகனம் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகதாக அம்மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, இந்திய மீனவர்கள் 14 பேரை பங்களதேஷ் கடற்படை கைது செய்துள்ளது.*

*அந்நாட்டின் Mongla துறைமுகம் அருகேயுள்ள ஆழ்கடல் பகுதியில் மேற்குவங்கத்தின் தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, கைது செய்யப்பட்டதாக பங்களாதேஷ் அரசு தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*ஏமன் கடல்பகுதியில் படகு மூழ்கி ஏற்பட்ட விபத்தில் எத்தியோப்பியாவைச் சேர்ந்த 68 பேர் உயிரிழந்தனர்.*

படகில் பயணித்த 154 பேரில் 12 பேர் உயிர் பிழைத்திருப்பதாக ஐநாவின் சர்வதேச புலம்பெயர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் காணாமல் போன 74 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

>>>>>><<<<<<

அமெரிக்காவின் சிறப்பு தூதர் திரு. Steve Witkoff அடுத்த வாரம் ரஷ்யா செல்லவிருப்பதாக அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

நியூஜெர்ஸியில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அவர், காஸா விவகாரம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில், தற்போது திரு. Steve Witkoff ஈடுபட்டு வருவதாக கூறியுள்ளார்.

வரும் ஆகஸ்ட் 9ஆம் தேதிக்குள் யுக்ரைன் உடனான மோதலை ரஷ்யா கைவிடாவிட்டால், அந்நாட்டிலிருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது அதிக வரி விதிக்கப்படும் என்று திரு. டோனல்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

ஈரான் நாட்டு அதிபர் திரு. Masoud Pezeshian தலைமையில் புதிய பாதுகாப்பு சபை அமைக்க அந்நாட்டின் தலைமை தேசிய பாதுகாப்பு கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது.

அந்த கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரானின் பாதுகாப்புத் திட்டங்களை மறுஆய்வு செய்யவும், அந்நாட்டு ராணுவத்தை மேம்படுத்தவும் இந்த சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில். யுரேனியம் செறிவூட்டல் உள்ளிட்ட அணுசக்தி மேம்பாட்டு நடவடிக்கைகளை அமைதியான முறையில் மேற்கொள்ளும் உரிமையை ஈரான் தொடர்ந்து பாதுகாக்கும் என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Seyed Abbas Araghchi தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

பாகிஸ்தானில் பெய்து வரும் பருவமழை மற்றும் அதனால் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் சிக்கி 300 பேர் உயிரிழந்துள்ளதாகவும், அவர்களில் 140 பேர் குழந்தைகள் என்றும் அந்நாட்டு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

ஜூன் 26ஆம் தேதி தொடங்கிய பருவமழையால், அந்நாட்டில் சுமார் 428 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும், 562 வீடுகள் முழுமையாக சேதமுற்றிருப்பதாகவும் அந்த ஆணையம் மேலும் கூறுகிறது.

இந்நிலையில், பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் இன்று முதல் வரும் 7ஆம் தேதிவரை இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டியில், இன்று நடைபெறும் லீக் ஆட்டங்களில் மணிப்பூரைச் சேர்ந்த TRAU அணி - கஷ்மீரையும், மோகன்பஹான் – எல்லைப் பாதுகாப்புப் படை அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>>><<<<<<